DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 4/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உதயகுமார் | தொழில் | | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மயில்சாமி | ஜாதி | | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.11.2025.

**முதல் விசாரணை**

1. நான் அமராவதி நகர் பெரும்பள்ளத்தில் வசித்து வருகிறேன். ஆக்ஸ்போர்டு பள்ளியில் வார்டனாக வேலை செய்து வருகிறேன். 06.12.2019 ம் தேதி செக்போஸ்ட்டில் உள்ள கடைக்கு சென்று விடடு ஆகஸ்போர்டு பள்ளியை நோக்கி இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருநதேன். வெஙங்டேஸ்வரா பள்ளியின் அருகில் சத்தம் கேட்டது. உடனடியாக நான் வாகனத்தை நிறுத்திவிட்டு நான் சென்று பார்த்தேன். நடராஜன் என்பவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. நடராஜன் என்பவர் மெரிந் கண்ணனின் தாத்தா ஆவார். மெரிந் கண்ணன் ஆக்ஸ்போர்டு பள்ளியில் படித்து வருகிறார். நடராஜன் என்பவருக்கு அமராவதி – உடுமலை நோக்கி வந்த இரு சக்கர வாகனத்தில்கணவன் மனைவி இருவர் வந்தனர். வேகமாக வந்து தவறான பாதையில் வந்தார்கள்.நடராஜன் மற்றுமஅவரது பேரனும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களும உடுமலை நோக்கி வந்தார்கள். உடனடியாக நானும சின்னசாமி என்பவரும் போய்

பார்த்தோம்.பின்னர் நான் எங்கள் உரிமையாளர் செந்தில்குமாருக்கு போன் மூலம் தகவல் சொன்னோம். அவர் அங்கு வந்தார். வந்தவுடன் நடராஜன் மகன் ஊட்டியில் உள்ள அவர் மகனுக்கு தகவல் கூறினார். நான் மெரிந்கண்ணனை அழைத்து கொண்டு பள்ளிக்கு சென்றுவி'டேன். நடராஜன் என்பவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நடராஜன் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக மறுநாள் காலை தகவல் சொன்னார்கள். நடராஜ் என்பவரின் மீது மோதிய இரு சக்கர வாகனத்தின் வண்டி எண் TN 48 AU 1998 ஆகும். இரு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் பெயர் டேவிட் ரஞ்சித் எனறுமு அவர் பின்னால் அமர்ந்த வந்தவரின் பெயர் தீபா என்றும் கூறினார்கள் . நடராஜன் என்பவருக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. போலிசார் என்னை உடுமலைஅரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. முதல் விசாரணையில் எங்கு செல்வதாக சொன்னிர்கள் என்றால் செக்போஸ்டிலிருந்து ஆக்ஸ்போர்டு பள்ளிக்கு போனதாக சொல்லியுள்ளேன். பள்ளியின் உள்ளே சென்று விட்டிர்களா என்றால் இல்லை, பள்ளியின் வெளியே விபத்து நடந்தது. சத்தம் கேட்டதற்கு முன்னிட்டு என்ன நடந்தது என்று பார்ககவில்லை என்றால் சரிதான். உங்கள் பள்ளியில் படிக்கும் பையன் பெயர் என்ன என்றால் மெரிந்த கண்ணா. உங்கள் பள்ளியில் அந்த பையன் படிக்கும் என்பதாலும் உங்கள் பள்ளியின் உரிமையாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க சம்பவத்தை நேரில் பார்த்ததாக அவருக்கு ஆதரவாக விபத்தை நேரில பார்த்தாக பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. தற்போதும் அந்த பள்ளியில் வேலை செய்து வருகிறிர்கள் என்றால் இல்லை. முதல் விசாரணையில் பள்ளியில் வேலை செய்து கொண்டு வந்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி போலிசார் தயார் செய்த வாக்குமூலத்தில் படித்ததை தற்போது சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் ஆமாம்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.